செய்தி வெளியீடு எண்:956 நாள்:27.10.2021

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பதிவுத்துறையின் பணி சீராய்வு கூட்டம் 27.10.2021 அன்று முற்பகல் 11.00 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., பதிவுத்துறை தலைவர் திரு.ம.ப.சிவன்அருள், இ.ஆ.ப., அனைத்து கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள், நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் உதவி பதிவுத்துறை தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் அனைத்து மாவட்டப்பதிவாளர்கள் (நிர்வாகம்) காணொலி காட்சி மூலம் கலந்து கொண்டனர்.

பதிவுத்துறை தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட வருவாய் கிராமங்களுக்கு இணையாக பதிவு கிராமங்களை மாற்றியமைப்பது, திருவாரூர், திருவள்ளூர் உட்பட 5 புதிய பதிவு மாவட்டங்கள் அமைப்பது போன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்து சீராய்வு செய்யப்பட்டது.

2021-22 நிதியாண்டில் அக்டோபர் 2021 முடிய ஈட்டப்பட்டுள்ள வருவாய் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சீராய்வு செய்யப்பட்டது. பதிவுத்துறையில் இந்த நிதியாண்டில் அக்டோபர் (26.10.2021) வரை வருவாய் ரூ.6974.66 கோடி ஈட்டப்பட்டுள்ளது. இவ்வருவாய் முந்தைய ஆண்டுகளை ஒப்பிடும்போது அதிகமாகும்.

# 2018 - 19 முதல் 2021 - 22 அக்டோபர் மாதம் முடிய உள்ள மாதங்களுக்கான வருவாய் ஒப்பீடு

| வருடம் | 2018 - 19 | | 2019 - 20 | | 2020 - 21 | | 2021 - 22 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதம் | மாதம் முடிய | மாதம் | மாதம் முடிய | மாதம் | மாதம் முடிய | மாதம் | மாதம் முடிய |
| | | | | | | | | (வருவாய் ரூ. கோடியில்) |
| ஏப்ரல் | 882.90 | 882.90 | 767.05 | 767.05 | 29.52 | 29.52 | 1077.43 | 1077.43 |
| மே | 883.76 | 1722.63 | 895.52 | 1662.57 | 298.62 | 328.14 | 233.89 | 1311.32 |
| ஜூன் | 975.84 | 2704.19 | 926.85 | 2589.42 | 655.12 | 983.26 | 789.33 | 2100.65 |
| ஜூலை | 944.06 | 3653.66 | 1025.37 | 3614.79 | 644.22 | 1627.48 | 1242.22 | 3342.87 |
| ஆகஸ்டு | 834.27 | 4493.98 | 792.73 | 4407.52 | 792.85 | 2420.33 | 1135.12 | 4477.99 |
| செப்டம்பர் | 915.25 | 5415.54 | 1061.77 | 5469.29 | 1087.25 | 3507.58 | 1495.88 | 5973.87 |
| அக்டோபர் | 893.50 | 6309.04 | 890.57 | 6359.86 | 1103.73 | 4611.31 | 1000.79* | 6974.66 |
| * 26.10.2021 வரை | | | | | | | | |

போலி ஆவணப்பதிவு மற்றும் ஆள்மாறாட்டம் தொடர்பான பிரிவு 68(2)ன் கீழான விசாரணைகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சீராய்வு செய்யப்பட்டது. இவ்விசாரணைகளை அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்டப்பதிவாளர்கள் (நிர்வாகம்) விரைந்து மேற்கொண்டு பொதுமக்களின் துயர் தீர்க்கும் வண்ணம் ஆணைகளை பிறப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

மேலும் பொதுமக்கள் சொத்து பதிவு தொடர்பான புகார்களை சென்னையிலுள்ள பதிவுத்துறை தலைவர் அலுவலகத்திற்கு வந்து அளிப்பதற்குள்ள சிரமங்களை தவிர்க்கும்பொருட்டு நேரடியாக அளிக்க ஏதுவாக வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் பதிவு குறை தீர்க்கும் முகாம் 9 பதிவு மண்டலங்களிலும் மற்றும் 50 பதிவு மாவட்டங்களிலும் 11.10.2021 முதல் செயல்பட்டு வருகிறது. இக்குறை தீர்க்கும் முகாம்களில் 27.10.2021 வரை 979 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, அதில் 197 மனுக்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளது. 782 மனுக்கள் நடவடிக்கையில்

உள்ளது. நிலுவையிலுள்ள மனுக்களுக்கு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணப்பட வேண்டுமென மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி வருவாய் மாவட்டத்திற்கு சமமாக சார்பதிவாளர் எல்லைகளை சீரமைத்தும் ஒரு வட்டத்தில் உள்ள கிராமங்களை ஒன்றிணைத்து அங்குள்ள சார்பதிவாளர் அலுவலகத்திலேயே இருக்கும் வண்ணம் எல்லைகளை மாற்றி அமைக்கும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இப்பணியினை மாவட்டவாரியாக விரைவு நடவடிக்கை மேற்கொண்டு 15.11.2021க்குள் அறிக்கை அளித்திட அறிவுறுத்தப்பட்டது. இத்திட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் ஒரு வருவாய் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு வட்டத்தை சேர்ந்த கிராமங்கள் வெவ்வேறு வட்டத்திற்குள் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களில் அமைந்திருப்பதை சீரமைத்து ஒரே வட்டத்தில் சார்பதிவகங்கள் அமைந்திடும் வண்ணமும், பொதுமக்கள் எளிதில் சென்றடையும் வகையிலும் புதிய சார்பதிவகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அரசின் வருவாயை பெருக்க முழு கவனம் செலுத்த அனைத்து அலுவலர்களையும் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார். நிலுவை ஆவணங்களை சரியாக இருப்பின் உடன் விடுவித்தல், தணிக்கைஇழப்புகளை வசூலித்தல்,சரியான ஆவணங்களை தாமதமின்றி பதிவு செய்தல் முதலான யுக்திகளை கையாண்டு வருவாயை பெருக்க அரசு செயலாளரால் அறிவுறுத்தப்பட்டது.

அலுவலகம் மற்றும் சுற்றுப்புறத்தினை தூய்மையாக வைத்து பராமரிக்க வேண்டும் எனவும், கோவிட் 19 தொற்று ஏற்படாவண்ணம் கை கழுவும் வசதி ஏற்படுத்தி தருதல், தனி மனித இடைவெளியை உறுதி செய்தல், கிருமி நாசினியை உபயோகப்படுத்துதல் போன்றவற்றை கடைபிடிக்க வேண்டும்

எனவும், ஆவணப்பதிவுக்கு வரும் பொதுமக்களுக்கு மனநிறைவான அனுபவத்தினை ஏற்படுத்தி தர வேண்டும் எனவும் அரசு செயலாளரால் அறிவுறுத்தப்பட்டது.

அனைத்து அலுவலர்களும் சீரிய முறையில் பணியாற்றவும், வருவாய் இலக்கினை அடைந்திடவும் மீள மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு இக்காணொலி கூட்டம் இனிதே நிறைவுற்றது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9